**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ம் நாள் புதன்கிழமை**

**இடைக்கால மனு எண். 4/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 42/2020**

1.கோட்டைமுத்து
2.ராமச்சந்திரன்
3.பாண்டி
4.ஜெயபெருமாள் ...... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/ எதிர் /**

சந்திரா ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பு 04.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.குரு.முருகானந்தம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளநிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சிபிசி ஆர்டர் 8 ரூல் 3(1)(A)ன் படி மனுவில் கண்ட ஆவணங்களை உரியகாலத்தில் தாக்கல் செய்யாத காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதாகவும், மனுவில் கண்ட ஆவணங்களை உரிய

காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு, தாவா மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :–**

மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழக்கில் சொல்லியுள்ள '**Bipin Shantilal panchal vs State of Gujarat"** முக்கிய கோட்பாடான

**OBJECTIONS AS TO ADMISSIBILITY OF EVIDENCE**

> Comment: In this court laid down a prudent system of dealing with objections as to admissibility of exhibits. It said that ordinarily if there is an objection - the court shall receive the disputed evidence along with a record of objection, and place it tentatively as an exhibit, later at the time of judgment the objection.

என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 நவம்பர் மாதம் 5 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.05 17:37:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.05 17:37:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

# ORDER

**I.A.No.4/2025**
**in**
**OS. No. 42/2020**

**Dated: 05.11.2025**